

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பெரம்பூர், டான் பாஸ்கோ பள்ளி வளாகத்தில் 'நம் மண், மொழி, மானம் காத்திட' "ஓரணியில் தமிழ்நாடு" உறுப்பினர் சேர்க்கை கொளத்தூர், திரு.வி.க. நகர் தொகுதிகள் பாக நிலை முகவர்கள் (BLA2), பாக சமூக வலைதள முகவர்கள் (BDA) மற்றும் இளைஞர் அணி அமைப்பாளர்கள் (BYO) பயிற்சிக் கூட்டம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நடைபெற்றது. இதில் அமைச்சர் எ.வ.வேலு "ஓரணியில் தமிழ்நாடு" உறுப்பினர் சேர்க்கை பணியில் உள்ள 1,332 களப்பணியாளர்களுக்கு உபகரணங்கள், உணவு வழங்கினார். நிகழ்ச்சியில் என்.ஆர்.இளங்கோ பாகமுகவர்களிடம் கணினி மூலமாக விளக்கி கூறினார். இதில் மேயர் பிரியாராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம் கவி, அ.வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல் மற்றும் டான் பாஸ்கோ பள்ளி ரெக்டார், ஜோசப் லியோ தொகுதி பார்வையாளர்கள் இரா. விடுதலை, என். கிருஷ்ணமூர்த்தி கொளத்தூர் பகுதிச் செயலாளர்கள் ஐசிஎப் வ.முரளிதரன், எ.நாகராஜன்,எம்.சி, செ.தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, மண்டலக் குழு தலைவர்கள் பி.கே.மூர்த்தி, சரிதா மகேஷ்குமார் மற்றும் இரா.நரேந்திரன்,கே.சந்துரு,சி.மகேஷ்குமார், மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் ஆகியோர் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

### இராஜேந்திர சோழன் பிறந்த நாள் ! அரியலூர் மாவட்டம் –

# சோழகங்கம் ஏரியில் - ரூ.12 கோடி மதிப்பீட்டில் நீர்வள ஆதார மேம்பாட்டுப் பணிகள்! ரூ.7.25 கோடி மதிப்பீட்டில் - சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஜூலை 23-**

**மாமன்னன் இராஜேந்திர சோழன் பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு அரியலூர் மாவட்டம் சோழகங்கம் ஏரியில் ரூ.12 கோடி மதிப்பீட்டில் நீர்வள ஆதார மேம்பாட்டுப் பணிகள், ரூ.7.25 கோடி மதிப்பீட்டில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் நடைபெறும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

அதன் விவரம் வருமாறு:-

அரியலூர் மாவட்டம், கங்கை கொண்ட சோழபுரத்தில் மாமன்னன் இராஜேந்திர சோழன் பிறந்தநாளான ஆடி திருவாதிரை விழாவினை 2021 - ஆம் ஆண்டு முதல் அரசு விழாவாகக் கொண்டாப்பட்டு வருகிறது.

கங்கைகொண்ட சோழபுரத்தில் மாமன்னன் இராஜேந்திர சோழனின் நினைவைப் போற்றும் வகையிலும், அந்தப் பேரரசனின் அழியாப் புகழினை உலகிற்குச் சொல்லும் வகையிலும், ஒரு புதிய அருங்காட்சியகம் 10 ஏக்கர் பரப்பளவில் 22.10 கோடி ரூபாய் செலவில் அமைத்திட தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்கான திட்டம் மற்றும் ஆரம்ப கட்டப்பணிகள் துவக்கப் பட்டுள்ளன.

மாமன்னன் இராஜேந்திர சோழன் கடாரம் உள்ளிட்ட தெற்காசிய நாடுகளை வெற்றிகண்டு ஆயிரம் ஆண்டு நிறைவடைந்த நிகழ்வினை சிறப்பிக்கும் வகையில் இந்த வருடம் 23.07.2025 ஆடி திருவாதிரை விழாவினை முன்னிட்டு புதிய அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

அரியலூர் மாவட்டம், பொன்னேரி எனப்படும் சோழகங்கம் ஏரி இராஜேந்திர சோழ மன்னரால் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட வரலாற்று சிறப்புமிக்க ஏரியாகும். இராஜேந்திர சோழ மன்னர் ஆட்சிகாலத்தில் சோழகங்கம் என்றும் அழைக்கப்பட்டது.

கங்கை படையெடுப்பு வெற்றியின் நினைவாக கங்கைகொண்ட சோழபுரத்தில் தன் நாட்டு மக்களின் தேவைக்காக கங்கை நீரைக் கொண்டு சோழகங்கம் என்ற ஏரியை (பொன்னேரி) இராஜேந்திர சோழன் உருவாக்கினார் என்பது திருவாலங்காட்டு செப்பேடுகளின் வாயிலாக அறிகிறோம். மாமன்னன் இராஜேந்திர சோழன் உருவாக்கிய இந்த ஏரியில் பல்வேறு மேம்பாட்டுப் பணிகளைத் தற்போது 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இதன்படி, 700 ஏக்கர் பரப்பளவு கொண்ட இந்த ஏரியின் கரைகள் பலப்படுத்தப்படும். மேலும், 15 கிலோ மீட்டர் நீளமுள்ள உபரிநீர் வழிக் கால்வாய்களை புனரமைத்தல், 4 வடிகால் பகுதிகளை தூர்வாருதல், 4 மதகுகளை புனரமைத்தல், 38 கிலோ மீட்டர் நீளமுள்ள வரத்து வாய்க்கால் தூர்வாரும் பணி உள்ளிட்ட பணிகளும் மேற்கொள்ளப்படும்.

இதன் மூலம் பிச்சனூர், குருவாலப்பர் கோவில், இளையபெருமாள் நல்லூர், கங்கைகொண்ட சோழபுரம், உட்கோட்டை மற்றும் ஆயுதகளம் ஆகிய கிராமங்களில் 1374 ஏக்கர் விவசாய நிலங்கள் பயன்பெறும்.

மேலும், சோழகங்கம் ஏரியை சுற்றுலாத் தலமாக மேம்படுத்தும் விதமாக தமிழ்நாடு அரசு சுற்றுலாத் துறையின் மூலம் ரூபாய் 7.25 கோடி மதிப்பீட்டில் தகவல் தொடர்பு மையம், நடைபாதை சிறுவர் விளையாட்டு மையம், இருக்கையுடன் கூடிய பூங்கா, சுற்றுச்சுவர், வழிகாட்டிப் பலகை, கண்காணிப்பு கேமராக்கள், பாதுகாப்பு அறை, மின்வசதிகள், கழிப்பிட வசதி, பசுமைப் பரப்பை உருவாக்குதல் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் மேம்படுத்தப்படும் என்றும் முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

### தூத்துக்குடி – காந்திநகர் அரசுப் பள்ளியில் உள்ள –

# 'அரிசனம்' என்ற பெயரை மாற்றிடுக!

## தொடக்கக் கல்வி இயக்குநருக்கு – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையத் தலைவர் முனைவர் நீதியரசர் ச.தமிழ்வாணன் – உறுப்பினர் எஸ்.ஆனந்தராஜா பரிந்துரை!

சென்னை, ஜூலை 23-

தூத்துக்குடி மாநகர், காந்தி நகரில் இயங்கும் அரசு தொடக்கப் பள்ளியின் பெயர் பலகையில் 'இந்து அரிசனத் தொடக்கப் பள்ளி' என்று இருப்பதில் 'அரிசனம்' என்ற வார்த்தையை உடனடியாக நீக்கிட வேண்டும் என கல்வித் துறைக்கு தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையத் தலைவர் நீதியரசர் ச.தமிழ்வாணன் - உறுப்பினர் எஸ். ஆனந்தராஜா ஆகியோர் பரிந்துரைத்துள்ளனர்.

தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி மாநகரில் காந்தி நகர் பகுதியில் அருந்ததி இன மக்களால் தமிழ்நாட்டிலேயே நடத்தப்படும் ஓர் பள்ளியின் பெயரான 'இந்து அரிசன துவக்கப் பள்ளி' என்ற பெயரில் நடைபெற்று வருவதாகவும். இதில் "அரிசனம்" என்ற பெயரினை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை 'சாதிப் பெயரில் பள்ளிகள் செயல்படக்கூடாது' என்று தடை செய்துள்ளதால், அந்த பெயரினை மாற்றிட கல்வித் துறைக்கு பரிந்துரை செய்திட மேற்படி பள்ளியின் "அரிசனம்" என்ற பெயரை நீக்கிட வேண்டும் என்று மனுதாரர் மேற்படி இந்து தொடக்கப் பள்ளி சங்க தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர் தரப்பில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையத்திற்கு கோரிக்கை வைத்திருந்தனர்.

அரசு உதவி பெறும் மேற்கூறப்பட்ட பள்ளி தொடர்ந்து தூத்துக்குடி நகர் காந்தி நகர் பகுதியில் செயல்பட்டு வருவது சமுதாயத்தின் விளிம்பு நிலையில் உள்ள மக்களுக்கு மிகவும் பயனளிக்கக் கூடிய வகையில் உள்ளது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடம் இல்லை.

'இந்து அரிசன துவக்கப் பள்ளி' எனப் பெயர் இருப்பது சட்டத்திற்கும். சமூக நீதிக்கும் புறம்பானதாக உள்ளது. எனவே மேற்கூறப்பட்ட இந்து அரிசனத் தொடக்கப் பள்ளி எனும் பெயரில் உள்ள "அரிசனம்" என்ற வார்த்தையினை நீக்கிட வேண்டும் என தொடக்கக் கல்வி இயக்குநருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

அவ்வாறு "அரிசனம்" என்ற வார்த்தையை நீக்கம் செய்து, உடனடியாக இவ்வாணையத்திற்கு தகவலை தெரிவித்திடவும் தெரிவிக்கப் படுகிறது. இந்திய சுதந்திர தினமான ஆகஸ்ட் தினத்திற்கு முன்னரே "அரிசனம்" என்ற வார்த்தையினை நீக்கம் செய்து. இவ்வாணையத்திற்கு 11.8.2025 தேதிக்குள் அறிக்கையினை அனுப்பி வைக்குமாறு மேற்படி தொடக்கப் பள்ளி இயக்குனர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு இவ்வாணைய அலுவலகத்திற்கு உத்தரவிடப்படு கிறது.

இவ்வாறு ஆணையத்தின் தலைவர் முனைவர் நீதியரசர் ச.தமிழ்வாணன் - உறுப்பினர் எஸ்.ஆனந்தராஜா ஆகியோர் உத்தரவிட்டுள்ளனர்.

# பூவிருந்தவல்லி - போரூர் மெட்ரோ ரயில் திட்டப் பணிகள்!

## டிசம்பர் மாதம் நிறைவடையும்!

சென்னை, ஜூலை 23-

பூவிருந்தவல்லி புறவழிச் சாலை முதல் போரூர் வரையிலான மெட்ரோ ரயில் திட்டப் பணிகளை டிசம்பர் மாதத்திற்குள் முடித்து செயல்படுத்த திட்டமிட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சென்னையில் போக்குவரத்து நெரிசலை குறைக்கவும், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் மெட்ரோ ரயில் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அதன்படி., 2015 ஆம் ஆண்டு முதல் கட்ட மெட்ரோ ரயில், விமான நிலையம் முதல் விம்கோ நகர் வரை 32 கிலோ மீட்டருக்கு, அதன் விரிவாக்கமான சென்னை சென்ட்ரல் முதல் பரங்கிமலை வரை 9 புள்ளி 34 கிலோ மீட்டருக்கு மெட்ரோ ரயில்கள் இயங்கி வருகின்றன. மெட்ரோ இயக்கமானது நீல நிறப் பாதை, பச்சை நிறப் பாதை என இரு வழிகளாக இயக்கப்பட்டு வருகின்றன. இதில் தினமும் 3 லட்சம் பேர் பயணிக்கின்றனர். இந்நிலையில், இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் பாதை பணிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன. 108 புள்ளி 9 கிலோ மீட்டர் தொலைவுக்கு ரயில்களை இயக்கவும், 128 நிலையங்களை அமைக்கவும் பணிகள் நடந்து வருகிறது. அதன்படி பூவிருந்தவல்லி போரூர் வரை 10 கிலோ மீட்டர் முதல் 15 கிலோ மீட்டர் தொலைவு பணிக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாகவும், இந்த பணிகள் டிசம்பர் மாதத்திற்குள் முடிக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.




### முன்னாள் வட்டச் செயலாளர் - முன்னாள் மாமன்ற உறுப்பினர்

# சி.மாங்காளி (எ) மங்களதாஸ் திருவுருவப் படம்: நே.சிற்றரசு திறந்து வைக்கிறார்!

## எம்.கே.மோகன் - கார்த்திக் மோகன் - ச.பரமசிவம் - வசந்தி பரமசிவம் - கு.பாபு பங்கேற்பு!

சென்னை, ஜூலை. 23

சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்குப் பகுதி, முன்னாள் வட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் மாமன்ற உறுப்பினரும், 100 (அ) வட்டக் கழக மூத்த முன்னோடியும், அண்ணாநகர் வடக்குப் பகுதி, மாவட்டக் கழகப் பிரதிநிதி இரா. வேல்முருகனின் மாமனார் மறைந்த சி.மாங்காளி (எ) மங்களதாஸ் அவர்களின் திருவுருவப் படத் திறப்பு நிகழ்ச்சி இன்று (23.07.2025 புதன்கிழமை) மாலை 6.30 மணிக்கு, எண்.71, 18 வது குறுக்கு தெரு, தா.பி.சத்திரம், சென்னையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு அண்ணா நகர் வடக்குப் பகுதிக் கழகச் செயலாளர் ச.பரமசிவம் தலைமை வகிக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் 100 வது வார்டு மாமன்ற உறுப்பினர் வசந்தி பரமசிவம், 100 (அ) வட்டக் கழகச் செயலாளர்



கு.பாபு, மாவட்டப் பிரதிநிதி வின்ஜா ஸ்டாலின் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் டி.ஜான், மோ.சிவகாந்த், வி.சுரேஷ், பி.கீதா, என்.ராஜன், ஜி.சாமிநாதன், சி.ரகுராமன், ஏ.பி. எம்.சாம்சன், மு.கதிரவன், பவானி வெங்கடேசன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்வில் சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி, கலந்து கொண்டு அன்னாரின் திருவுருவப் படத்தினை திறந்து வைத்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்.

இந்நிகழ்வில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, அண்ணாநகர் தெற்கு பகுதிக் கழகச் செயலாளர் ந.இராமலிங்கம் எம்.சி, கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன், அண்ணாநகர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சோ.மா.இராமச்சந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் எஸ்.சேரன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ.டி.முருகன், கராத்தே என்.ஆனந்த், கழக மகளிர் அணி பிரச்சாரக்குழுச் செயலாளர் கே.ராணி ரவிச்சந்திரன் எம்.சி, சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர் எல்.ரஜினிகாந்த்,

வட்டக் கழகச் செயலாளர்கள் அ.ஏகாம்பரம், க. கோவிந்தராஜ், சி.பி.திருமலை, பி.சந்திரசேகர், எம். ஜி.ரவிக்குமார், பி.ஜெய்சங்கர், க.அருள்கண்ணன், மாமன்ற உறுப்பினர்கள் மெட்டில்டா கோவிந்தராஜ், புஷ்பலதா ஜெய்சங்கர் மற்றும் பகுதி நிர்வாகிகள் பா.பிரபு, வி.சாய்செல்வம், கே.பி.சுரேந்தர், இரா. இளங்கோவன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு மலர் அஞ்சலி செலுத்துகின்றனர்.

அன்னாரின் மனைவி எம். முருகம்மாள், மகள்கள் வி. நர்மததேவி, ஆர்.நந்தினி, எம்.நளினி, எஸ்.நதியா, மகன் எம்.நவின்குமார் ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்கும் அனைவரையும் வரவேற்கின்றனர்.



சென்னை கிழக்கு மாவட்டம், அம்பத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பயனாளிகளுக்கு வீட்டு மனை வழங்க வருகை தரும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பதற்காக நடைபெற்ற அம்பத்தூர் வடக்கு, தெற்கு, கிழக்கு பகுதி நிர்வாகிகள் கூட்டத்தில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., மண்டல குழு தலைவர் பி.கே.மூர்த்தி, பகுதி செயலாளர்கள் டி.எஸ்.பி. ராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர்.நாகராஜ் மற்றும் சன் பி. முனியாண்டி, டாக்டர்.ஜி சாந்தகுமாரி எம்.சி, எல்.பி.எஃப்.மோகன், டாக்டர் பூர்ணிமா எம்.சி, ரமேஷ் என்ற நீலகண்டன் எம்.சி து.ஆயிரம், ஜி.வி.நாகவள்ளி எம்.சி, கு.கிருஷ்ணமூர்த்தி, வட்டச் செயலாளர்கள்: மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு.மோகன்குமார், மு.விஜயகுமார், த.வ.லால் பி.செந்தில்.வி.ரவிந்திரன், பு.வீரா(எ) வீரராகவன், வெ.ராதாகிருஷ்ணன், த.கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ.சேகர் எம்.சி, நா.நெப்போலியன், ஆர்.டீக்கா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.